# மீகாள்

# நேசம் கசப்பாக மாறும் பொழுது!

## (18:20, 27; 19:11-17)

ஒன்று சாமுவேல் புத்தகம், மனித வாழ்வின் ஏறக்குறைய எல்லா அனுபவங்களையும் தொடுகின்றது. இந்த புத்தகத்தில் ஒரு "நேசம்/காதல்" நடக்கின்றது. இந்த நேசத்தின் வரலாறு இன்றைய நாட்களில் அங்காடிகளில் மிகச் சிறப்பாக விற்கும் புத்தகங்களுக்கான கதைக் கருவின் விவரங்கள் யாவும் கொண்டுள்ளது. இந்த வரலாறு இரு இளம் காதலர்களை, பல்வகைப் போராட்டங்களை, மறைவான சூழ்ச்சிகள் உணர்வின் உச்சங்கள் மற்றும் பள்ளத்தாக்குகள், அபாயம் முதலியவற்றைக் கொண்டுள்ளது. இது படிப்பதற்கு எழுச்சிமிக்க வரலாறாக உள்ளது. ஆனால் இந்தக் காதல் கதையானது, கடைசித் திரை விழுகையில் அந்தத் தம்பதிகள் "அதன் பிறகு என்றென்றும் நலமுடன் வாழ்ந்தார்கள்" என்று முடிவடையத் தவறுகின்றது. இப்படிப்பட்ட மகிழ்வான முடிவு சாத்தியமானதாய் இருந்திருக்க முடியும், ஆனால் "அன்பு" என்பது அதன் சரியான இடத்தில் முடிசூட்டப்படாதிருந்தது, எனவே, கசப்புத் தன்மை ஆளுகை செய்ய அனுமதிக்கப்பட்டது.

திருமண பாசப்பிணைப்பு பல திருமணங்களில் வெறுப்பினால் தூக்கியெறியப்பட்டதாக இருத்தல் என்பது கவலை தரும் உண்மை நிலையாக உள்ளது. சந்தோஷமான இல்லம் அடிக்கடி கசப்பான யுத்த களமாகின்றது. சாக்ரட்டீஸின் மனைவியான சாந்தப்பே உக்கிர கோபமிக்க உணர்வுடன் இருந்தாள். ஒரு முறை அப்பெண்மணி தனது உக்கிர கோபம் தெரிவித்த ஆலோசனைப்படி அவர் மீது எல்லா வெறுப்புகளையும் காண்பித்தாள், சாக்ரட்டீஸ் வெளியே சென்று தமது முன்வாயிற்படியில் அமர்ந்தார். அவரது அமைதியும் அக்கறையற்றதுமான நடக்கை அப்பெண்மணிக்கு இன்னும் எரிச்சல் மூட்டியது. அப்பெண்மணி தனது கோபத்தில் படிகளில் ஏறி வந்து ஒரு வாளி நிறைய இருந்த தண்ணீரை அவரது தலையில் ஊற்றினார்கள். சாக்ரட்டீஸோ சிரித்துக் கொண்டே, அதிகம் இடி இடித்தால் மழை வருமல்லவா என்று மட்டும் கூறினார்!

இந்த இரு இளம் காதலர்கள் - ஈசாயின் மகனான தாவீது மற்றும்

*சவுலின் மகளான மீகாள் ஆகியோர்-நாம் யாவரும் நன்கு கவனிக்க வேண்டிய மிகவும் மகிழ்ச்சியற்ற பாடம் ஒன்றை நமக்குப் போதிக்கின்றார்கள்.*

## திருமணம்

*இவர்கள் கோலியாத் கொல்லப்பட்ட பிறகு விரைவிலேயே சந்தித்தார் கள். தாவீது அந்த அரக்கனைக் கொன்றால் அதற்குப் பரிசாக சவுலின் மகள் மேராபைப் பெற்றுக் கொள்ளுவார் என்று வாக்களிக்கப்பட்டிருந்தார். ஆனால் சவுலின் பொறாமை, பயம் மற்றும் பல தீய எண்ணங்களின் சேர்க்கையானது அவர் தமது வாக்குறுதியை மீறும்படி வழிநடத்திற்று, மேராப் வேறொருவருக்குத் தரப்பட்டாள். சவுலின் இளைய மகள் தாவீதை உண்மையிலேயே விரும்பினாள் என்ற செய்தி சவுலுக்கு எட்டியது. சவுல் இதை, தாவீதைக் கொல்வதற்கு ஒரு வாய்ப்பாகப் பயன்படுத்திக் கொண்டார் (18:20-25). தாவீது மீகாளைத் தமது மனைவியாக உரிமை கோருவதற்கு எதையும் செய்யத் தயாராயிருந்தார் (18:27). இவர் அவளை வீரத்துவமாக உரிமைகோரினார், இவ்விருவரும் "திருமணம் பரலோகத்தில் நிச்சயிக்கப்படுகிறது" என்ற இஸ்ரவேலரின் கிசுகிசுப்புக்கு ஆளாயினார்!*

*இவர்களின் அன்புக்கான நிரூபணம், இவர்கள் தாவீதின் மீது சவுல் தந்த துன்புறுத்துதலுக்கு எப்படி பதில்செய்கை செய்தனர் என்பதில் மெய்ப் படுகின்றது (19:11-17). சவுலின் வன்முறை மனச்சான்றின் எல்லா கட்டுப் பாடுகளையும் உடைத்தெறிந்தது, கடைசியில் அந்த அரசர் தாவீதுக்கு தண்டனை நியமித்து அவரை வெளியரங்கமாகக் கொலை செய்யத் திட்டமிட்டார். தனிப்பட்ட வகையில் தாவீதைக் கொலை செய்வதில் தோற்ற சவுல் (18:10), தாவீதின் பதுங்குதலுக்கு வலை வீசினார். மீகாள் தனது தந்தையின் தந்திரத்தைப் பற்றி அறிந்து, தனது பொம்மையொன்றைக் கிடத்தி தாவீது நோய்ப்படுக்கையில் இருப்பதாகக் கூறி அவரைத் தப்புவித்தாள். அவளது இந்தச் சூழ்ச்சியான செயல் கண்டறியப்பட்ட பின் அவள் தன்னைக் காத்துக் கொள்வதற்கு சவுலிடம் பொய்யுரைத்தாள். இந்தத் தப்பித்தல் பற்றி தாவீது எழுதிய விவரம் சங்கீதம் 59ல் பதிவு செய்யப் பட்டுள்ளது. இது தாவீதின் நாடோடி வாழ்வைத் தொடங்கி வைத்தது. மீகாள் தாவீதிடமிருந்து கவரப்பட்டு இன்னொரு மனிதருக்கு மனைவி யாகத் தரப்பட்டாள் (2 சாமு. 3:13-16). எட்டு முதல் பத்து ஆண்டுகள் வரை இந்தக் காதலர்கள் பிரிக்கப்பட்ட நிலையிலேயே இருந்தார்கள்.*

*சவுலின் மரணத்திற்குப் பிறகு, தாவீதும் மீகாளும் மீண்டும் ஒன்று கூடுதல் நடந்தது. மறுபடியும் இணைந்த இந்த நிகழ்வானது இவர்கள் மீண்டும் பிரிந்திருக்கக் காரணமாகும் கசப்பொன்று விரைவில் நடக்கவிருந்ததால் கூர்மையான கவனத்தைப் பெறுகின்றது. சவுல் கொலை செய்யப்பட்ட பிறகு, அரியணை உயிருடனிருந்த அவரது மகனுக்குத் தரப் பட்டது, ஆனால் அங்கு சவுல் மகிழ்வுடன் அனுபவித்திருந்த ஒருமைப் பாடும் இணக்கமும் இல்லாதிருந்தது (2 சாமு. 3:1). கடைசியில், போரிட்டுக் கொண்டிருந்த இரு பிரிவினரையும் ஒப்பந்தப் பேச்சு வார்த்தைகள்*

*இணைத்தது (2 சாமு. 2:12 முதல்).*

*மீகாளை மீண்டும் தாவீதிடம் உடனடியாக ஒப்படைக்க வேண்டும் என்பதே ஒப்பந்தப் பேச்சு வார்த்தையில் தாவீதின் முதல் நிபந்தனையாக இருந்தது. தாவீது, "நல்லது, உன்னோடே நான் உடன்படிக்கை பண்ணு வேன்; ஆனாலும் ஒரே காரியம் உன்னோடே கேட்டுக் கொள்ளுகிறேன்; அது என்னவெனில், நீ என் முகத்தைப் பார்க்க வரும் பொழுது, சவுலின் குமாரத்தியாகிய மீகாளை நீ அழைத்து வர வேண்டும், அதற்கு முன் நீ என் முகத்தைப் பார்ப்பதில்லை ..." என்று கூறினார் (2 சாமு. 3:13). இவரது ''முதல் காதலின்'' நினைவுகள் ஆழமாய்ப் பாதுகாக்கப்பட்டிருந்தன என்பதில் ஐயமில்லை. இந்த மறுபடியும் இணைதல் தாவீதை அவரது இராஜரிக நிலைக்கு மறுபடி கொண்டு வந்து சேர்ப்பதாகவும் இருக்கும், ஏனெனில் அவரது மனைவி (சவுல்) அரசரின் மகளாயிருந்தாள். நீண்ட நாள் எதிர்பார்க்கப்பட்டிருந்த இந்த மறு இணைப்பு, பத்து ஆண்டுகள் பிரிவுக்குப் பிறகு எபிரோனில் நடைபெற்றது. மீகாளுக்காகக் காத்திருந்த வேளையில் தாவீதின் இதயம் வேகமாய்த் துடித்ததையும் அவர் உணர்வுக் கிளர்ச்சி அடைந்ததையும் உங்களால் கற்பனை செய்ய முடிகின்றதா? இங்கு இவர் தமது முதல் காதலியுடன், அவளது தனிப்பட்ட அபாயங்களின் மத்தியிலும் தம்மை உயிருடன் காப்பாற்றிய அந்தப் பெண்ணுடன் மீண்டும் இணையவிருந்தார். கூடிய அளவுக்கு சீக்கிரமாய் தாம் அவளுடன் இருக்க அவர் நாடியிருப்பார் என்பதில் வியப்பெதுவும் இல்லை! ஆனால் விஷயங்கள் மாறியிருந்தன.*

*பத்து ஆண்டுகளுக்கு முன்னால் மிகச் சிறியதாகக் காணப்பட்ட வேறுபாடுகள் இன்னும் அதிகமாய் வளர்ந்திருந்தன. அவர்களிருவரும் அதே போலிருந்தாலும், அவர்களின் மதிப்பீடுகள் அதிக உறுதியாய் அமைந்திருந்தன. அவர்கள் "காதலித்துக் கொண்டிருந்த" காலத்தில் தங்கள் திருமணத்திற்குத் திட்டமிட்டுக் கொண்டிருந்ததாலும், முதல் சில மாதங்களே ஒன்றாய் வாழ்ந்திருந்ததாலும் இந்த வேறுபாடு (அப்பொழுது) பெரிதாய்த் தோன்றாதிருந்தது. ஆனால் இந்த வேறுபாடுகள் வளர்ந்து, கடைசியில், இஸ்ரவேலின் பண்டிகை நாள் ஒன்றில் வெடித்தது. மென்மை யான அன்பு இறந்து போனது, கசப்பு தாவி வந்தது. "திருமணம் பரலோகத் தில் நிச்சயிக்கப்படுகின்றது'' என்ற இக்கூற்றிற்கான கடைசிக் குறிப்பு கவலையுடன் அடையாளப்படுத்தப்படுகின்றது (2 சாமு. 6:23).*

## துன்பம்

*இவர்களின் அன்பு மற்றும் பாசப் பிணைப்பைச் சிதைக்கும்படி குற்றம்சாட்ட ஒரே ஒரு தவறு போதுமானதாயிருந்தது என்பதை மீகாளின் வாழ்வில் இருந்து நாம் காண்கின்றோம். சாத்தானுக்கு ஒரே ஒரு தவறு மட்டுமே தேவை என்பதை நினைவில் வையுங்கள், அவன் அந்தத் தவறை ஒரு வெடிப்பாகப் பயன்படுத்தி அதன் மூலமாக அழிவென்னும் வெள்ளத்தை அனுப்புவான் (யாக். 2:10).*

*மீகாள் தேவனை தகுந்த வகையில் கனப்படுத்தத் தவறினாள் என்பதே*

*இவளது ஒரே ஒரு தவறாயிருந்தது! பரிசுத்தம் என்பதல்ல ஆனால் மதிப்பு, உண்மையான ஆராதனையல்ல ஆனால் விக்கிரகாராதனை என்பதே இவளது விருப்பமாயிருந்தது. இவள் சவுலின் கீழ் பயிற்றுவிக்கப் பட்டிருந்தாள். அந்த யுகத்தில் மக்கள் தேவனைப் பற்றி அக்கறை கொண்டிருந்ததில்லை (1 நாளா. 13:3). பொது ஆராதனை புறக்கணிக்கப் பட்டிருந்தது, மற்றும் மத வைராக்கியம் மரித்திருந்தது. மீகாள் தேவனை அறிந்திருந்தாள், ஆனால் இவள் உண்மையிலேயே தேவனை "அறிந்திருக்க" வில்லை! இவள் தேவனை "தேராபீமுக்கு" இணையாக வைத்திருந்தாள் (19:16). இவளது பக்தியானது மூடநம்பிக்கை, சம்பிரதாயம், மற்றும் குளிரான தன்மை ஆகியவற்றினால் அடையாளப்படுத்தப்பட்டிருந்தது. இவள் வளர்ந்த வளர்க்கையில், தாவீதின் பயபக்தியை இனியும் இவளால் சகித்துக் கொள்ள இயலவில்லை! தாவீதில் இவள் ஒரு வீரனையும் அரசரையும் மட்டுமே (காண) விரும்பினாள். இவள் யெகோவாவைப் பற்றி கவலைப்படவில்லை மற்றும் இவ்விதமாக இவள், யெகோவாவுக்கு முன்பாக தாவீது தம்மை இஸ்ரவேல் மக்கள் யாவருடனும் சமமாக வைத்துக் கொண்டதின் மூலம் காண்பித்த தாழ்மையையும் பக்தியையும் குற்றப்படுத்தினாள் (2 சாமு. 6:20).*

*ஒரே ஒரு தவறு அவளது நேசத்தைக் கசப்பாக மாற்றி விட்டது, மற்றும் இது இன்றைய நாட்களில் திருமணங்களிலும் அதிக கலகம் மற்றும் கசப்புக்குப் பொறுப்பு வாய்ந்ததாக உள்ளது! மகிழ்ச்சி ஆளுகை செய்ய வேண்டிய குடும்பங்கள் பலவற்றில், துணைகளில் ஒருவர் மற்றவரைக் காட்டிலும் தேவனை அதிகமாய் அன்புகூருவதால் கசப்பான சோதனைகள் நிறைந்துள்ளன. அப்படிப்பட்ட இல்லங்களில் இருவரும் பரஸ்பரம் அன்புகூருவதென்று வாக்களித்திருப்பதை அறிந்திருந்தும் அவர்களிருவரும் நித்தியத்திற்கும் பிரிந்திருத்தலை வலியுறுத்துவதால் துன்பம் கூட்டப் படுகின்றது! தேவன் மீது பலத்த விசுவாசம் மற்றும் அன்பு ஆகியவற்றுடன் திருமண வாழ்வைத் தொடங்கிய பலர், கலகத்தை மட்டுமே கண்டறியத் தக்கதாக ''சமாதானம்'' என்ற உறுதிப்பாடுகளுக்குப் படிப்படியாக இணங்கிச் சென்று விடுகின்றார்கள்!*

*திருமணம் என்ற தீவிரமான அடிவைப்பைப் புரிந்து கொள்வதற்கு, இரு ஆத்துமாக்களை வாழ்வு முழுவதற்கும் ஒன்று சேர்த்து வைக்கின்ற மாற்ற இயலாத படிநிலைகளை மேற்கொள்வதற்கு முன் இந்தக் கருத்தைப் பற்றி எச்சரிக்கையாயிருங்கள்!*

## விளைவுகள்

*இந்த வரலாறு, மதரீதியாகப் பிரிந்துள்ள இல்லத்தின் துன்பநிலை பற்றி திட்டவட்டமாக எடுத்துரைக்கின்றது. திருமணப் பிணைப்பு பிரிக்கப்படும் பொழுது ஏற்படும் விளைவுகள் பற்றியும் கணவர் மனைவிக்கு இடையில் பெரும் பிளப்பு ஏற்பட்டு அது அகன்று நிரந்தரமாகுதலின் விளைவுகள் பற்றியும் கவனம் செலுத்துங்கள்.*

*மேட்டிமையும் வெறுப்பும் கொண்ட ஆவி காணப்படும். மீகாள்*

இராஜரீகமான வாழ்வை விரும்பினாள், இவள் "சாதாரண மக்களுடன்" இணைந்து எதையும் செய்ய விரும்பவில்லை. இது, நமது மதிப்பீட்டின் முடிவு நமது விசுவாசத்துடன் நெருங்கிய தொடர்பு கொண்டிருப்பதைக் காண்பிக்கின்றது. விசுவாச விஷயங்களில் இருவர் கருத்து வேறுபடுகின்ற பொழுது, அவர்கள் வாழ்வின் மதிப்பீடுகளிலும் கருத்து வேறுபடுவார்கள். தாவீது பொது மக்களுடன் தாராளமாய்ப் பழகியதினால், அவரது ஒப்புக் கொடுத்தலானது மீகாளின் அரசிக்குரிய மேன்மையின் மீது (தன்) பிரதி பலிப்பை ஏற்படுத்திற்று. மீகாள் தன்னை "சவுலின் மகள்" என்பதாகக் கண்டாள்; இவளது மதிப்பீடுகள் அதையே அடிப்படையாகக் கொண்டிருந்தன.

ஒருவர் மற்றொருவர் மீது வஞ்சகப் புகழ்ச்சியுள்ள மற்றும் கடித்துக் குதறும் மொழிநடையைச் சுழற்றி வீசுகின்ற நிலை ஏற்படும். பண்டிகை நாள் என்பது தாவீதின் வாழ்வில் மிகவும் சந்தோஷமான நாளாயிருந்தது. இவர் தம் இல்லத்தை "ஆசீர்வதிக்கும்" படியாகத் திரும்பியிருந்தார் (6:20). மகிழ்பொங்கும் விருந்தொன்றைக் காணும்படி எதிர்பார்த்தவராக அவர் வந்தார், ஆனால் இவர் நேரடியாக ஒரு "பெருங்குளவியின் கூட்டிற்குள்" நடந்து சென்று விட்டார். அவரை வாழ்த்தி வரவேற்ற முதல் வார்த்தைகள் வஞ்சப் புகழ்ச்சியாகவும் ஏளனமானவைகளாகவும் இருந்தன. அவள், "அற்ப மனுஷரில் ஒருவன் தன் வஸ்திரங்களைக் கழற்றிப் போடுகிறது போல, இன்று தம்முடைய ஊழியக்காரருடைய பெண்களின் கண்களுக்கு முன்பாகத் தம்முடைய வஸ்திரங்களை உரிந்து போட்டிருந்த இஸ்ரவேலின் இராஜா இன்று எத்தனை மகிமைப்பட்டிருந்தார்" (2 சாமு. 6:20) என்று கூறிய பொழுது (கோபத்தினால்) புகைந்தவளாயிருந்தாள். "அற்ப மனுஷர்" என்பது எபிரெய மொழியில் ஒருவர் பிறர் மீதுள்ள வெறுப்பை வெளிப்படுத்துவதற்குப் பயன்படுத்தப்படும் மிக பலத்த சொற்றொடராக உள்ளது. இவள் அவரை "தலையில் ஒன்றுமில்லாத முட்டாள்" என்று அழைத்தாள்! (இ.வ. மத். 5:22.) ஒருவேளை, இந்த எதிர்கொள்ளுதல் தாவீது சங்கீதம் 52:2, 57:4 அல்லது 120:3ஐ எழுத உட்கண்ணோட்டத்தைப் பெற உதவியிருக்கலாம். தாவீது தமது அரச உடையை மட்டும் களைந்து போட்டு சாதாரண குடிமகன் போல உடுத்திக் கொண்டதற்கு, மீகாள் அவர் "நிர்வாணமாய்" இருந்தார் என்று குற்றம் சாட்டினாள். தாவீது - மீகாள் போன்ற திருமணத் தம்பதிகளுக்கிடையில் வஞ்சகப் புகழ்ச்சி மற்றும் கடித்துக் குதறும் வார்த்தைகள் கொண்ட இந்தக் காட்சியானது துரதிர்ஷ்டவசமாகப் பொதுவானதாயுள்ளது.

புரிந்து கொள்ளுதலில் குறைபாடு, வெறுப்புணர்வு மற்றும் கடைசியாகப் பிரிந்து போகுதல் ஆகியவை இருக்கும். தாவீதைப் போல தேவனிடத்தில் அன்புகூர மீகாள் தவறியதால் இவள், ஆராதனையில் வைராக்கியம் பற்றி ஒன்றும் அறிந்திருக்கவில்லை. இவள் அவரை "அவமதித்தாள்" (6:16), இது இவளின் வெறுப்பின் ஆழமான உணர்வுகளைக் குறித்தது. கிறிஸ்தவர்களில் பலர், தங்கள் கணவர் அல்லது மனைவியினால் ஆவிக்குரிய தன்மையை இழக்கின்றார்கள். விசுவாசத்தில் வேறுபாடு என்பது திருமண வாழ்வில் வெற்றி கொள்ள இயலாத மாபெரும் தடையாக உள்ளது.

*வழக்கமாக, தேவனோடு உடன்பாடு மற்றும் துணைவருடன் சமாதானம் அல்லது, தேவனுடன் சமாதானம் மற்றும் துணைவரை விட்டுவிலகுதல் என்பவற்றிற்கிடையில் ஒன்றைத் தேர்ந்து கொள்ள வேண்டியதாகின்றது.*

*தாவீது-மீகாள் போன்ற திருமணங்களில் பெரும்பிளப்பு என்பது கடந்து செல்ல இயலாததாகிறது மற்றும் புண்படுதல்கள் குணப்படுத்த இயலாதவைகளாகிறது என்பதே முடிவாயுள்ளது. இதனால் தனிமைப் படுதல் விளைகின்றது.*

## முடிவுரை

*மீகாள் ‘‘தேவனுடைய இருதயத்திற்கேற்ற ஒரு பெண்ணாக’’ இருந்திருந்தால், எழுதப்பட்ட முடிவு எப்படிப்பட்ட மாறுதலைக் கொண்டிருந்திருக்கும்! இவளும் தாவீதும் கணவன் மனைவியாக வாழ்வதை விட்டொழித்தார்கள், இவர்களின் அந்நியப்படுதல் அநேகமாக மிகவும் தீவிரமாயிருக்கும் (2 சாமு. 6:23). 2 சாமுவேல் 21:8ல் இவளுக்கு ஐந்து மகன்கள் இருந்ததாக குறிப்புள்ளது, ஆனால் இவர்கள் மேராபின் மகன்களாயிருந்திருக்கக் கூடுமே ஒழிய, மீகாளுக்குப் பிறந்தவர்களாய் இருந்திருக்க வாய்ப்பில்லை. மீகாள் தன் சகோதரியின் மகன்களை வளர்த்தாள் என்பது மெய்யாக உள்ளது.*

*ஒரு காலத்தில் மென்மையாக இருந்த இந்த காதலானது எவ்வளவு துன்பகரமாக முடிகின்றது! இன்றைய நாட்களிலும் பலர் இதே பாதையைப் பின்பற்றுகின்றார்கள் என்பது எவ்வளவு துன்பகரமானது!*

*விசுவாசத்தில் சமானமான தன்மையில்லாமல் இரண்டு பேர் ஒன்றாக வாழ முயற்சி செய்ததால்தான் இந்தக் காதல் பேரழிவில் முடிந்தது. இவர்களின் திருமணத்தைப் பின்வரும் வார்த்தைகள் விவரிக்கின்றன: மன்னியாமை, சுயத்தை மையம் கொண்ட தன்மை, மேட்டிமை, கூர்நாவு, வஞ்சப் புகழ்ச்சி, வெறுப்பு நிறைந்த தன்மை, மற்றும் சகியாத தன்மை.*

*தேவனுடைய பரிசுத்த புத்தகத்தைப் படிக்கும் ஒவ்வொரு மாணவரும்/மாணவியும், இல்லமானது விசுவாசத்தில் ஒன்றிணைந் திருப்பது எவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்ததாக உள்ளது என்பதைத் தீவிரமாய்க் கண்ணோக்க வேண்டும். நமது கிறிஸ்தவ இளைஞர்களும் இளம் பெண்களும் கிறிஸ்தவர்களை மட்டுமே நேசிக்கவும், திருமணம் செய்து கொள்ளவும் வேண்டும் என்றும், இவ்விதமாக அவர்கள் தங்களால் இயன்ற அளவுக்கு தாவீது-மீகாள் அனுபவித்த கசப்பான துன்பத்தைத் தவிர்க்க வேண்டும் என்றும் நாம் அவர்களை வற்புறுத்தி வேண்டிக் கொள்வது அவசியமாக உள்ளது! இந்தத் துன்பமானது அவர்களின் இல்லங்களில் மீண்டும் இருக்க அவசியமில்லை என்ற உணர்வறிவை நாம் அவர்களுக்குள் பதியச் செய்ய வேண்டும்.*